மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,திருவைகுண்டம்

அ.வ.எண்.137/2022
பி.வா.சா.1

பெயர் : ராமகிருஷ்ணன் தேதி : 07.03.2024
வயது : த/பெ :
கிராமம் : தொழில் :
மாவட்டம்:

1873 ம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டம் 10 வது பிரிவின் படி 2024 ம் ஆண்டு மார்ச் வியாழன் 07 ம் நாள் அவர்களால் பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**குறுக்குவிசாரணை**

1. 1ம் வாதி காலம் சென்ற அர்ச்சுனனின் முதல் மனைவி என்றால் சரிதான். 2 வது வாதி இறந்து போன அர்ச்சுனனுக்கும் 1ம் வாதிக்கும் பிறந்தவர் என்றால் சரிதான். இறந்து போன அர்ச்சுனன் என் தாயாருடன் ஏற்பட்ட தொடர்புக்கு பின்பு தான் 1ம் வாதியை விரட்டி விட்டுவிட்டார்கள் என்றால் சரியல்ல. நான் எதிர்வழக்குரையில் 3 வது பத்தியில் 1ம் வாதிக்கும் அர்ச்சுனனுக்கும் நடந்த திருமணத்தை முறித்துக் கொண்டார்கள் என்று சொல்லியுள்ளதில் எந்த தேதியில் முறித்துக்கொண்டார்கள் என்றால் நான் பிறப்பதற்கு முன்பு நடந்தது அது பற்றி எனக்கு தெரியாது. அதே பத்தியில் கருப்பையா என்பவரை 1ம் வாதி திருமணம் செய்துகொண்டார் என்பது பற்றியும் எனக்கு தெரியாது என்றால் தெரியும் நான் அவரை பார்த்துள்ளேன். நான் சொல்லியுள்ள கருப்பையாவின் தகப்பனார் பெயர் தெரியாது.

2. அவர் எந்த ஊர் என்றால் பூர்வீகம் விருதுநகர் பக்கத்தில். எந்த ஊர் என்று தெரியாது. நான் சொல்லியுள்ளது போல் கருப்பையா என்பவர் கிடையாது என்றால் சரியல்ல. கருப்பையா என்ற பெயர் நான் கற்பனையாக சொல்லப்பட்ட பெயர் என்றால் சரியல்ல. என் தாயாருக்கும் அர்ச்சுனனுக்கும் எந்த தேதியில் திருமணமானது என்றால் 1979 வைகாசி மாதத்தில் திருமணம் நடந்தது. அதற்கான திருமண பத்திரிக்கை உண்டா என்றால் தெரியாது. குறுக்குதுறை முருகன் கோவிலில் வைத்து எனது தாயாருக்கும் அர்ச்சுனனுக்கும்

திருமணமானது. கோவிலில் திருமணம் நடந்திருந்தால் கோவிலில் உள்ள பதிவேட்டில் பதவு செய்யப்பட்டிருக்கும் என்றால் கண்டிப்பாக பதிவு செய்திருப்பார்கள். அந்த பதிவு சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் 1979ல் நடந்ததால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. கோவிலில் பதிவு செய்யப்பட்டிருக்கும் என்பதை யூகத்தில் தான் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எங்க ஊரில் உள்ள பெரியவர்கள் சொன்னதை வைத்து சொன்னேன். என் தாயாரின் தகப்பனார் சண்முகவேல் மற்றும் என் தாயாரின் சகோதரர் லெட்சுமணன் ஆகியோர்கள் சொன்னார்கள். எதிர்வழக்குரை 8வது பத்தியில் 1வது வாதி கருப்பையா என்பவரை திருமணம் செய்துகொண்டு பாளையங்கோட்டையில் குடியிருந்து வந்தததாக சொல்லியுள்ளதில் எந்த முகவரியில் குடியிருந்து வந்தார் என்றால் மகாராஜன் நகரில் குடியிருந்த வந்தார். மகாராஜன் நகரில் எத்தனை தெருக்கள் உள்ளது என்றால் தெரியாது. எந்த தெருவில் குடியிருந்தார் என்றால் பாம்பே திரையரங்கம் பின்புறம் என்று அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் சொன்னார்கள். அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் யார் என்றால் 1ம் வாதியின் வீட்டில் உள்ள வேலைகாரர்கள் சொன்னார்கள். வேலைக்காரர்கள் எந்த ஊரைச் சார்ந்தவர்கள் என்றால் பாளைங்கோட்டை, தெய்வசெயல்புரம், வடக்குகாரசேரி ஆகிய பகுதிகளை சார்ந்தவர்கள். வேலைக்காரர்கள் பெயர் தெரியாது என்றால் சரிதான். நான் சொல்வது போல் வேலைக்காரர்கள் யாரும் கிடையாது என்றால் சரியல்ல. 1வது வாதியின் தகப்பனார் வீடு மகாராஜ நகரில் உள்ளது என்றால் அவர்கள் அப்பா வீட்டில் தான் அனைவரும் சேர்ந்து இருந்தார்கள்.

குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

ஒப்பம்/-
சா. முத்துலெட்சுமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவைகுண்டம்.